ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே.

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1–50

10. பேரவை மற்றும் மேலவையின் மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகளுக்குக் குடும்ப ஓய்வூதியம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அறிவிப்பு ஒன்றினை வெளியிட அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு முதல் முறையாக 13-11-1996 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் தனது பதவிக் காலத்தில் மறைந்தால் அவருடைய வாரிசுதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது. இப்போது, 13-11-1996-க்கு முன்பு ஒரு சட்டமன்ற உறுப்பினர் தனது பதவிக் காலத்தில் மறைவுற்றிருந்தாலும் அவருடைய வாரிசுதாரர்களுக்கும் அதேபோன்று சட்டமன்ற மேலவையைப் பொறுத்தவரையில் 31-10-1986 வரை மேலவை உறுப்பினர்களாக பதவி வகிக்கும் காலத்தில் மறைந்த மேலவை உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் 1-10-2007 முதல் வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் அடிப்படையில் மறைந்த உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு 1-10-2007 முதல் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 5,000/- வீதம் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ரூபாய் 32 லட்சம் ஆகும். இதன்மூலம் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவையில் பொறுப்பு வகிக்கிற காலத்தில் மறைவுற்ற அனைத்து உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் கிடைக்க இவ்வரசு வழிவகை செய்துள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுகிறது"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.